# 1995 ஆம் ஆண்டிற்கான தேர்தல்கள் ஆணையாளரின் நிருவாக அறிக்கை

## 1.0 முன்னுரை

1.1 வருடாந்த தேருநர் பதிவேடுகளின் திருத்தம், பாராளுமன்றம், மாகாண சபைகள், மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகளின் வெற்றிடங்களை நிரப்புதல் என்பனவே 1995 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் பிரதான நடவடிக்கைகளாக விளங்கின.

1.2 தேருநர் பதிவேடுகளின் திருத்தம் தொடர்பான ஆரம்ப பணிகள் ஒழுங்கமைக்கப்பட்டு, தீவகமடங்கிலும் உரிய காலத்தில் பூர்த்தியாக்கப்பட்டன. எனினும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்டுள்ள குடிசார் கலவரங்களினால் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம், வன்னி, மட்டக்களப்பு தேர்தல் மாவட்டங்களின் சில பகுதிகள் என்பவற்றில் கணக்கெடுப்புப் பணிகள் தடங்கலுக்குள்ளாயின.

1.3 மீளாயப்படும் ஆண்டில் பாராளுமன்ற உறுப்புரிமையில் வெற்றிடங்கள் ஏற்படவில்லை. எனினும், 1994 ஆம் ஆண்டிலிருந்து நிரப்பப்படாமலிருந்த இரண்டு வெற்றிடங்கள் இவ்வாண்டில் அரசியலமைப்பிற்கும், 1981 இன் 01 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்திற்கும் இணங்க நிரப்பப்பட்டன.

1.4 1995, யுன் மாதம் 30 ஆந் தேதிக்கு முன்பு நடாத்தப்படவேண்டிய உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்களுக்கான ஆரம்ப ஒழுங்கு நடவடிக்கைகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்தபோதிலும், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 5 (2) அ பிரிவின் கீழும், நகரசபைக் கட்டளைச் சட்டத்தின் 255 ஆவது அதிகாரத்தினதும், மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 252 ஆம் அதிகாரத்தினதும் 10 (2) ஆ பிரிவின் கீழும் குறித்த தேர்தல் நடாத்தப்பட வேண்டிய திகதியிலிருந்து ஒரு வருடத்துக்கு பிற்போடப்பட்டது.

1.5 1990 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க மாகாண சபை (திருத்த) சட்டத்தின் கீழ் கலைக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களின் மாகாண சபை தவிர்ந்த ஏனைய மாகாண சபைகளின் உறுப்புரிமையில் ஏற்பட்ட வெற்றிடங்கள் மீளாயப்படும் ஆண்டில் நிரப்பப்பட்டன.

1.6 1981 இன் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் கீழ் அரசியற் கட்சியாக அங்கீகாரம் பெற 1994 ஆம் ஆண்டு விண்ணப்பித்திருந்த 02 விண்ணப்பங்கள் விசாரணைகளின் பின்னர் மேற்குறித்த சட்டத்தின் 7 ஆம் பிரிவின்கீழ் நிராகரிக்கப்பட்டன. மீளாயப்படும் ஆண்டில் 15 அரசியற் கட்சிகள் அங்கீகாரம் பெற விண்ணப்பித்தன. விசாரணைகளின் பின்னர்12 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டதோடு 02 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. ஒரு விண்ணப்பம் தொடர்பான விசாரணைகள் இன்னும் முற்றுப் பெறவில்லை.

1.6.1 உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 27 (அ)(3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தலுக்கிணங்க 1994 ஆம் ஆண்டு அங்கீகாரம் பெற விண்ணப்பித்திருந்த விண்ணப்பங்களில் மீதமிருந்த 09 விண்ணப்பங்களும் நிராகரிக்கப்பட்டன.

1.7 1991 மே மாதம் 11 ஆம் திகதி நடைபெற்ற ஒரே தினத்தில் நடாத்தப்பட்ட இலங்கையின் முதலாவது உள்ளூர் அதிகார சபைகளுக்கான தேர்தல் தொடர்பான தேர்தல்கள் ஆணையாளரின் அறிக்கை 1995 மே மாதம் 25 ஆந் திகதி பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

### 2.0 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டம்

*2.1 தேருநர் பதிவேடுகளின் திருத்தம் – 1994*

தேருநர் பதிவேடுகளின் தயாரிப்பு 1994 யூன் மாதம் 01 ஆந் திகதி ஆரம்பித்து உரிய காலத்தில் பூர்த்தியாக்கப்பட்டது. 22 தேர்தல் மாவட்டங்களிலுமிருந்து 19,213 கோரிக்கைகளும், 20 தேர்தல் மாவட்டங்களிலிருந்து 1,060 ஆட்சேபனைகளும் கிடைக்கப்பெற்றன. இந்த கோரிக்கைகள், ஆட்சேபனைகள் தொடர்பான விசாரணைகள் 1995.02.10 ஆந் தேதியளவில் நிறைவுபெற்றன. விசாரணைகளின் பின்னர் 8,000 கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு பதிவேட்டில் சேர்க்கப்பட்டன. 1,060 மொத்த ஆட்சேபனைகளில் 442 ஏற்றுக்கொள்ளப்பட்டன. விவரங்களுக்கு தயவுசெய்து அட்டவணை I ஐப் பார்க்க. பதிவேடு தயாரிப்பு வேலைகள் 1995 சனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டு 1995 மார்ச் 31 ஆந் திகதி நிறைவு செய்யப்பட்டது. 1994 ஆம் ஆண்டின் தேருநர் பதிவேட்டின்படி வாக்காளர்களின் தொகை 1,12,13,281 ஆக அதிகரித்துள்ளதோடு 1993 ஆம் ஆண்டோடு ஒப்பிடுகையில் 2,68,216 வாக்காளர்களின் அதிகரிப்பு பதிவு செய்யப்பட்டுள்ளது. 1993, 1994 ஆண்டுகளுக்கான 22 தேர்தல் மாவட்டங்களுக்குமெனத் தயாரிக்கப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை தொடர்பான ஒப்பீட்டு வாசகமொன்றை தயவுசெய்து அட்டவணை II இல் காண்க.

*2.2 : தேருநர் பதிவேடுகளின் திருத்தம் – 1995*

2.2.1 யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம் தவிர்ந்த ஏனைய சகல தேர்தல் மாவட்டங்களிலும் கணக்கெடுக்கும் உத்தியோகத்தர்களுக்கான அறிவுறுத்தல்கள் 1995 மே மாதத்தில் வழங்கப்பட்டன. 1994 ஆம் ஆண்டின் பதிவேடுகள் திருத்தத்தின் போது சகல கிராம சேவை அலுவலர்களும் பெற்றிருந்த பயிற்சிகள், அனுபவம் என்பவற்றைக் கருத்திற் கொண்டு முன்னைய ஆண்டுகளில் கிடைத்த முறையீடுகளின் இயல்பு, கணக்கெடுப்பு உத்தியோகத்தர்கள் பின்பற்ற வேண்டிய உரிய நடைமுறைகள் என்பவற்றின்பால் அவர்களின் கவனம் ஈர்க்கப்பட்டது. இந்த பதிவேடுகளின் திருத்தம் 1995 யூன் மாதம் 01 ஆந் தேதி ஆரம்பிக்கப்பட்டது. கொழும்பு, தெஹிவளை – கல்கிசை மாநகர சபை எல்லைப் பிரதேசம், கொழும்பு மாவட்டத்தின் சில பகுதிகள் என்பவற்றில் மாத்திரம் தவிர்க்க முடியாத காரணத்தால் விஷேட கணக்கெடுப்பு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டார்கள். கணக்கெடுக்கும் உத்தியோகத்தர்களின் பணிகள் கள மட்டத்தில் உதவித் தேர்தல் ஆணையாளர்களினால் சரி பார்க்கப்பட்டன. குடி சார் கலவரங்கள் அதிகரித்தமை, இராணுவ நடவடிக்கைகள் என்பன காரணமாக யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் கணக்கெடுப்பு வேலை தவிர்க்கப்பட்டது.

*2.2.2. 'அ', 'ஆ' நிரல்களின் கண்காட்சி*

கோரிக்கைகளுக்கும் ஆட்சேபனைகளுக்கும் உதவும் விதத்தில் 1995 நவெம்பர் 01 ஆந் திகதி முதல் 28 ஆந் தேதி வரை கண்காட்சிக்கு வைப்பதற்கான 'அ', 'ஆ' நிரல்களின் தட்டச்சிடலும், தயாரிப்பும் 1995 ஒக்றோபர் மாத இறுதியில் பூர்த்திசெய்யப்பட்டன. இக்காலப் பகுதிக்குள் 17,549 கோரிக்கைகளும், 698 ஆட்சேபனைகளும் கிடைக்கப்பெற்றன. குறித்த கோரிக்கைகள், ஆட்சேபனைகள் தொடர்பான விசாரணை 1995 திசெம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. 1994 ஆம் ஆண்டு கிடைக்கப்பெற்ற 59,313 கோரிக்கைகள், 2,187 ஆட்சேபனைகளோடு ஒப்பிடுகையில் கோரிக்கைகளிலும், ஆட்சேபனைகளிலும் குறைவொன்று காணப்படுகிறது.